மலர் 8 இதழ் 3




## வேண்டும் வரங்கள் தருவாயே!

★

வேலா வேலா படிப்பைத் தா
வேலா வேலா பண்பைத் தா
வேலா வேலா அழகைத் தா
வேலா வேலா ஆற்றல் தா

முருகா முருகா ஊக்கந் தா
முருகா முருகா உழைப்பைத் தா
முருகா முருகா உயர்வைத் தா
முருகா முருகா உன்னைத் தா

கோலப் பாட்டி ஔவைக்கு
ஞாலத் தமிழை மிகச் சொன்ன
வேலா முருகா கதிர்காமா
வேண்டும் வரங்கள் தருவாயே!

— வி. கந்தவனம்

கௌரவ ஆசிரியர்:
15-7-70 மு. க. சுப்பிரமணியம் சதம் 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கையர் விரும்பும் நவநாகரீக
★ நகைகளுக்கும் ★ வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே.என்.எம். மீருன்சாஹிப்

"தங்கப்பவுண் நகை மாளிகை"

கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்

*Visit*

## K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

KANNATHIDDY *Dial*: 585 JAFFNA

● சுத்தம் சுகம் தரும்!
★ 'மில்க் வைற்' வெண்மை தரும்!!
○ கந்தையானுலும் கசக்கிக் கட்டுங்கள்!

துரித சலவைக்கு
மில்க்வைற சலவைப்பவுடரை வாங்கிப் பாவியுங்கள்!

மில்க்வைற் சோப் மேலுறைகளை
அனுப்பிப் பரிசுகளைப் பெறுங்கள்!

மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

## வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற் செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 4-00 |
| இந்தியா | ரூபா | 4-00 |
| மலாயா | $ | 4-00 |

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா | 75-00 |
| உள் அட்டை | ரூபா | 60-00 |
| முதற் பக்கம் | ரூபா | 50-00 |
| உட் பக்கம் | ரூபா | 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின்
15 வீதக் கழிவுண்டு.
விபரங்களுக்கு எமக்கு எழுதுக.


வெற்றிமணி
253 1/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (இலங்கை)


## பொருளடக்கம்


தலையங்கம் ... ... ... ... 3
கிரிமலையினிலே ... ... ... 4
ஐரோப்பா — அறிமுகம் ... ... 7
கணக்கியலுக்கோர் அறிமுகம் 10
மக்கள் இலக்கியம் ... ... ... 13
தமிழ் உலகம் போற்றும் திரு. 17
காகிதப் பூ ... ... ... ... ... 21
சந்தா தாரருக்கு ... ... ... 23
நீலமலர் வாசகநேயருக்கு ... 23
ஆசிரியர் பதில் ... ... ... ... 24
கவிதை அரங்கம் ... ... ... 25
ஆசிரியர் சம்பள விகிதம் ... ... 29



# — வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள் மொழி நலமுற ஒலித்திடுவாய்.

மலர் 8 | 15-7-70 புதன்கிழமை | இதழ் 3


## பெற்றோர் - ஆசிரியர் சங்கங்கள்

பாடசாலைகளின் நலன் கருதி இயங்கவேண்டிய சங்கங்களுள் பெற்றோர் - ஆசிரியர் சங்கமும் இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றது. ஆசிரியர்களிடையேயும் பெற்றோர்களிடையேயும் பரஸ்பர நல்லெண்ணத்தை ஏற்படுத்தி மாணவருடைய பிரச்சனைகளைத் தீர்த்துப் பாடசாலை வளர்ச்சிக்காக உழைத்தலே இச் சங்கத்தின் அடிப்படை நோக்கமாகும். பாடசாலை நிர்வாகத்திற் தலையிட இதற்கு அதிகாரமில்லை.

பல இடங்களில் பெற்றோர் - ஆசிரிய சங்கங்கள் குறித்த் நோக்கத்துக்கு மாறாகக் குழப்பம் விளைக்குஞ் சங்கங்களாகவே இயங்குகின்றன. ஆசிரியர்களைப்பற்றி அவம் பேசலும், நிர்வாகத்திற் தலையிடலும், ஆர்ப்பாட்டங்கள் செய்வதும் பெற்றோர் - ஆசிரிய சங்கங்களின் பெருஞ் சாதனையாக இருப்பதைச் செய்திப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

உண்மையை ஆராய்ந்து பாராது, உணர்ச்சிவயப்பட்டு மிகக் கேவலமான உதாரண சம்பவங்களில் முக்கியமாகப் பெற்றோர் ஈடுபடுவது மிகவும் கவலைக்குரியது; பயங்கர ஆபத்தானது. நாளைக்கு நம் பிள்ளைகளும் இவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் என்று விழைகின்றார்களா?

ஆசிரியர்களிடையேயும், மாணவர்களிடையேயுமுள்ள நல்லுறவைக் கெடுத்தல் பாடசாலை வளர்ச்சிக்கு உகந்ததன்று. தமது பிள்ளைகளை ஆசிரியர்களுக்கு எதிராகவும், நிர்வாகத்துக்கு மாறாகவும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது தமது கண்களுக்குத் தாமே மண்ணை வாரிப் போடுவதற்குச் சமமாகும்.

குரும்பசிட்டி பொன். பரமானந்தர் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் பணிகள் மிகவும் முன்மாதிரியானவை. ஆர்ப்பாட்டங்களின்றி, அனாவசியமான பேச்சுக்களின்றி அடக்கமான முறையிற் பல ஆக்கபூர்வமான வேலைகளை இச் சங்கம் செய்துவருகின்றது. மாணவர் தொகை அதிகரிப்பதையறிந்து ஒன்பது மாதங்களில் மூன்று வகுப்பறைகளைக்கொண்ட கட்டிடம் ஒன்றை நிறுவியுள்ளனர். பாடசாலைக்கு மிகவும் அவசியமாகவிருந்த மின்சாரவசதியையும் பெற்றுக்கொடுத்துள்ளனர். விஞ்ஞான கூடத்துக்குவேண்டிய இன்றியமையாத பல பொருட்களை வாங்கிக் கொடுத்திருக்கின்றனர். ஊர்போற்றும் உத்தமப் பெரியார் திரு. பொன். பரமானந்தரின் பெயரை அவர் நிறுவிய பாடசாலைக்குச் சூட்ட விரும்பி மேலிடத்திலிருந்து அனுமதியும் பெற்று, அந் நாமத்தையே சூட்டியுமுள்ளனர்.

இவையன்றோ, பெற்றோர் - ஆசிரியர் சங்கங்கள் பின்பற்றவேண்டிய பணிகள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலையினிலே . . . .

ஏ. ரி. பொன்னுத்துரை B. A.

நீல நிற உடையணிந்து ஓடையைப்போல் ஓடி அசைந்து தாள லயத்துடன் ஆடுகின்றனர் அரிவையர் அறுவர். மெல்லென நெளிந்து வளைந்து செல்லும் அருவியைக் காட்டும் பாவனையில் மிளிர்கிறது அவர்களின் குழைவும் வளைவும். ஆமாம் பெயர்பெற்ற ''மகாவலி கீத நாட்டியா'' என்ற நாட்டிய நாடகத்தின் ஆரம்பந்தான் இது.

சிற்றோடைகள் சேர்ந்து பெருங்கிளைகள் தோன்றும் வேளை தண்ணீரின் பிரவாகம் துரிதகதி அடைகிறதல்லவா? பல வரிசைகளாய் ஆடிவரும் மங்கையரின் சங்கமிப்பும் அவர்களின் குதிமிதியுடன் அமைந்த துரிதகதி ஆடலும் மேற்கூறிய நிலையைத் தத்ரூபமாய்க் காட்டுகின்றன.

இதற்கிடையில் —

நிஜ ஓடைக் கருகே, ஒரு நினைவோடை. வில்லும், அம்பும், ஈட்டியும், வாளும் மோதிடும் சப்தம். குருதியின் செம்மை படிந்த முண்டங்களின் சிதறல், வீரக் கனல் தெறிக்கும் கோரப்போர். ராம ராவண யுத்தம்; ஆமாம் கதகளியின் நிழல் படிந்த ஒரு கோர தாண்டவம்.

பின்னர் —

கண்டிக்கு அணித்தாய்க் கரைபுரண்டு ஓடிவரும் மகாவலியின் கோலக் காட்சி. அவ்வேளை விகாரையைக் காண்கிறோம்; புத்தசிலையைக் காண்கிறோம். பிரமிக்கவைக்கும் பெரஹராப் பெருவிழாவையுங் காண்கிறோம். நிஜமாகவல்ல; நர்த்தன ரூபத்தில்தான்.

பாய்ந்துவரும் மகாவலியின் பாய்ச்சலை மட்டும் காட்டுவதுடன் விட்டுவிடாது, அதனை மெருகூட்டும் வகையில் புதியதோர் உத்தியைக் கையாளுகிறார் நட்டுவாங்கம் செய்த கலைஞர். மகாவலி ஊடுருவிச் செல்லும் பிராந்தியங்களுடன் தொடர்புடைய பண்டை இலக்கிய இதிகாச சம்பவங்களையும் ஆடல் மூலம் இணைத்து ஒரு பூரண கலா ரூபத்தை இந்த நாட்டிய நாடகத்துக்கு அளிக்கிறார் கலைஞர். இந்த உத்திமுறை நல்ல உத்திமுறை. உயரிய உத்திமுறை. என் சிந்தையைக் கவர்ந்த உத்திமுறை.

இத்தகைய உன்னத உத்தியை - படிப்போரைப் பிடித்தீர்க்கும் ஓர் உத்திமுறையைக் ''கீரிமலையினிலே...'' என்ற காவியத்தில் அழகாகக் கையாண்டுள்ளார் கவிஞர் கந்தவனம் அவர்கள்.

கீரிமலையினிலே, கேணியருகினிலே, பூரித்த நிலையினிலே தன்னையே மறக்கிறார் கவிஞர். மகாவலிகங்கைபோல, அவர் மனத்



திலே நீண்ட பெரிய நினைவோடை ஊற்றெடுக்கிறது. மெல்லென அசைகிறது; பாய்கிறது; கட்டுமீறிக் கரைபுரண்டு ஓடுகிறது. உணர்ச்சி அலைகளையும் வீசுகிறது. இந்த நினைவோடையில் மிதக்கும் விடயங்கள் காத்திரமானவை; கருத்து மிக்கவை; கலாரூபம் பெற்றவை; எமக்கு அவசியம் வேண்டியவை. சாதி வேறுபாடில்லாத ஒரு சமுதாயத்தை அமைக்கின்றார்.

வேந்தனைப்போல் கொலுவிருக்கும் கவிஞர், தமிழுக்காய் தலை ஈந்த வள்ளலைவிட ஒருபடி கூடவே அள்ளி அள்ளிக் கொடுக்கின்றார்; தற்பெருமையும் கொள்கின்றார்.—இவ்வேளை, நினைவோடை சுற்றி வலம் வருகிறது சடையப்பவள்ளலை, பாரியை, ஓரியை, காரியை, அதிகமானை; பேகனை, நள்ளியை, வள்ளல் குமணனை எல்லாம் நினைவுகூரும் கவிஞர் ஈழத்தைப் பொறுத்தவரை இராமனாதனுக்குப் பின் தமிழ் வளர்க்க வாரிவழங்க யார்தான் பிறந்தார் என அங்கலாய்க்கிறார். சடையப்பவள்ளலை வலம் வந்த ஓடை இப்போ கம்பனை அணுகுகிறது, இதனால் அடக்கமுள்ள ராமன், அன்புமிக்க தம்பியர், கற்பின் கனலி சீதை, அறம் காத்த தசரதன், இசைவல்லுனன் இராவணன், மானமிகு விபீடணன், நன்றி மிக்க கும்பகர்ணன் மற்றும் கூனி, கைகேயி ஆதியாம் பாத்திரங்கள் பற்றிய எண்ணம் - கம்பனை நாடக இயக்குநனாய்க் கவிஞருக்குக் காட்டுகிறது. இத்தகைய கவிவாணனின் கவித்துவத்தை ஈழத்தில் உண்மையாக உணர்ந்தவர்கள், உரைகள் மூலம் இரசனையை வளர்த்தவர்கள் உண்டா? என்ற வினாவுக்கு விடைபகர்வார்போல் பண்டிதமணியும், பெரியதம்பிப்பிள்ளையும், வித்துவான் வேந்தனாரும் கவிஞரின் முன்னே காட்சியளிக்கின்றனர்.

''கண்டவன் ஒருவன் உள்ளான் கம்பனைக் கருத்து வைத்துப்
பண்டித மணிநற் கங்கை பாய்ந்துசெய் தொண்டைப் யோலே
உண்டுதொல் புகழி ராமன் உன்னத வமிழ்தை யள்ளிக்
கொண்டுவந் துலகத் தார்க்குக் குவிக்கிறான் குவிக்கிறானே''

''சிறந்தநற் தத்து வத்தைத் தெருவெலாம் முழக்கஞ் செய்யப்
பிறந்தவன் பெரிய தம்பிப் பெருமையும் வாழ்க மாதோ''

''மெத்தவே கற்ற மேதை மேன்மைகொள் நயங்கள் கூறும்
வித்துவான் வேந்த னாரும் விண்ணவ னாகி னானே!''

என்னும் அடிகள் கவிஞரின் நினைவோடையில் எழுந்தடிக்கும் இன்ப அலைகள். நம் நாட்டு எழுத்தாளர்கள்மேல் உள்ள கவிஞரின் அயரா அபிமானம் உளத்தில் கிளர்ந்தெழும் தேசிய உணர்ச்சி எனக்குப் பிடித்த அரிய அம்சங்களாகும்.

ஈழநாட்டின் சலசலப்பு, நிறைகுடமாய் இன்றி சண்டைகள் பிடித்து வீணே தாழ்வுறும் தன்மை, போலி வாழ்க்கை, நெஞ்சுடன் ஒட்டாத போலித் தமிழ் உணர்வு, படிக்காமலேயே படித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர்போல் நடிக்கும் பாள்மைபோன்ற பல சிந்தனை அலைகள் இவ் வோடையில் தோய்பவரைச் சிந்திக்க வைக்கிறது; சீர்பெறச் செய் கிறது. தமிழ்மீது கொண்ட ஆராக் காதல் இக் காவியத்தின் கருப்பொருளாய் அமைந்தாலும் அதை கவிஞர் அழகுறக் காட்ட— கலாரூபம் கொடுத்துக் காட்டக் கையாண்ட முறைதான் இக் காவி யத்தின் விசேட அம்சமாய்த் தெரிகிறது. இதில்தான் கவிஞரின் தனித்துவம் — சுயமுத்திரை பளிச்செனத் தெரிகிறது, கருவா? உருவா? என்று குட்டை குழப்ப விரும்பவில்லை. காவியத்தை அமைத்திருக்கும் புதிய உத்திமுறை இனிக்கிறது. இன்பம் அளிக் கிறது என்று சொல்லி வைக்க ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமா?

கிளுகிளுப்பை யூட்டவல்ல தலைப்பு, உலகுக்கு முற்றிலும் புதிய உவமைகள், எதுகைச் சிறப்பு வாய்ந்த கவிதைகள், எழுச்சிமிக்க அறிவுரைகள், ஏன்? நூல் அச்சிட்டிருக்கும் விதம் — எல்லாவற்றி லுமே 'புதுமை' கொலுவிருக்கின்றது.

போற்றப்படவேண்டிய காவியம். தமிழர் பெருமைப்படவேண் டிய உன்னத இலக்கியப் படைப்பு!

-✷-

## இறைவன் ஒரு திருடன்

உங்கள் கண்களையும், காதுகளையும் நன்கு மூடிக்கொள்ளுங்கள். மனச் சலனத்தை நிறுத்தித் தியானியுங்கள். நிசப்தம், தனிமை, இருள் இருக்கும்போது இறைவன் திருடன்போல வருகின்றான்.

— பாபுராவ்படேல்

## கலங்கரை விளக்கம்

காலத்தோடு போராடுகிறவர்கள் கலங்கரைவிளக்கமாகத் திகழ் கிறார்கள்.

— தமிழ்வாணன்

## நரையின் தத்துவம்

ஆடு, மாடு, காகம், நாய், நரி முதலிய பிராணிகளின் உடம் பிலுள்ள உரோமம் பிறந்தபோது இருந்ததுபோலவே முதுமையிலும் உள்ளது. ஆனால் மனிதனுக்கு மட்டும் நரைக்கிறது! ஏன்? மனி தனுக்கு இறைவன் தரும் நோட்டீஸ்தான் நரை. இந்த உடல் நிலை யற்றது; இறைவனை அறிந்துகொள். - இதுவே நரையின் தத்துவம்.

— திருமுருக கிருபானந்தவாரியார்

✷ ✷





# 10. ஐரோப்பாவின் காலநிலை

வி. கந்தவனம் பி. ஏ

## 1. காலநிலைத் தன்மைகள்

ஐரோப்பாக் கண்டம் கடகக் கோட்டுக்கு முற்றாக வடக்கே அமைந்துள்ளதால் அங்கு மட்டான காலநிலையே காணப்படுகின்றது. ஐரோப்பாவில் வெப்பநிலை அடிப்படை யில் ஒரு வருடத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை வசந்தம் (இலைதளிர்), கோடை, இலையுதிர், மாரி என்பனவாகும்.

இக் கண்டத்தின் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வெப் பம் படிப்படியாகக் குறைந்து செல்கின்றது. இத்தாலியின் உரோம் நகரத்தில் சராசரி வெப்பநிலை 60°ப ஆகும். ஆனால் பின்லாந்தின் கெல்சிங்கி பட்டணத்திற் சராசரி வெப்பநிலை 33°ப ஆகவுள்ளது. அத்திலாந்துக் கரையில் இருந்து உள்நாடு நோக்கியும் வெப்பநிலை குறைந்து செல் கின்றது. பிரான்சின் பாரிசு நகரத்தின் சராசரி வெப்ப நிலை 50°ப ஆகும். ஆனால் கிழக்கில் அமைந்திருக்கும் சோவி யத்து இரசியாவின் மொஸ்கோவில் சராசரி வெப்பநிலை 39°ப ஆகும். மேற்குக் கடற்கரைப் பகுதியில் அத்திலாந் துச் சமுத்திரத்தின் விரிகுடா நீரோட்டம் செல்கிறது. இது ஓர் மென்சூட்டு நீரோட்டமாகும். இதனால் மேற்கு ஐரோப்பாவில் வெப்பங் கூடுதலாகவுள்ளது.

மேற்குத் திசையிலிருந்து வீசுங் காற்றினால் ஐரோப்பா அதிக மழையைப் பெறுகின்றது. ஆயினும் மழை மேற்கி லிருந்து கிழக்கு நோக்கிப் படிப்படியாகக் குறைந்து செல் கின்றது.

ஐரோப்பாவில் ஐந்துவகைக் காலநிலைகள் காணப்படு கின்றன. அவை மத்தியதரைக் காலநிலை, குளிரான இடை வெப்பக் காலநிலை, இடைவெப்பப் புல்நிலக் காலநிலை, குளிர்க் காலநிலை, தண்டராக் காலநிலை என்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மத்தியதரைக் காலநிலைப் பிரதேசம்

இது மத்தியதரைக் கடலையடுத்துள்ளது. இசுபானியா, தென் பிரான்சு, இத்தாலி, யுகோசிலேவியா, அல்பேனியா, கிறீசு ஆகிய நாடுகள் இக் காலநிலையைக் கொண்டுள்ளன. கோடையில் வெப்பமும் வறட்சியும் மாரியில் மழையும் குளிரும் காணப்படுவது இக்காலநிலையின் பிரதான தன்மைகளாகும்.

வருடத் தொடக்கத்தில் வெப்பம் சற்றுக் கூடுதலாக இருக்கும். நிரந்தரமாகவுள்ள பிரகாசமான சூரிய ஒளி இதன் விசேட தன்மையாகும். மேற்கிலிருந்து வீசுங் காற்றினால் மாரியில் மழை பெய்கின்றது.

கோடைகால வறட்சியை எதிர்த்து நிற்க வல்ல நிலையான மரங்கள் இங்கு வளர்ந்துள்ளன. வறட்சியிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய விதத்தில் நீண்ட வேர், தடித்த இலைகள், தொங்கும் வேர், சிறிய இலைகள் என்பவற்றை இம்மரங்கள் பெரிதும் கொண்டுள்ளன. மத்தியதரைக் காடுகளிற் பெரும்பகுதி இக்காலத்தில் மனித முயற்சிகளுக்காக அழிக்கப்பட்டுவிட்டன.

## 3. குளிரான இடைவெப்பக் காலநிலைப் பிரதேசம்

இது மத்தியதரைப் பிரதேசத்துக்கு வடக்கில் அமைந்துள்ளது. மத்திய வடபிரான்சு, யேமனி, பெல்சியம், நெதலாந்து, தென்மாக்கு, பிரித்தானிய தீவுகள் ஆகிய கடலையண்டிய நாடுகளில் 'சமுத்திரச் செல்வாக்கு' அதிகம். சமுத்திரத்திலிருந்து வீசும் நீராணுக்களையுடைய காற்றுக்களால் ஆண்டு முழுவதும் இப்பகுதிக்கு மழை கிடைக்கின்றது. ஆயினும் வருடத் தொடக்கத்தில் இம் மழை அதிகமாக இருக்கும். மாரியில் இந்நாடுகளில் உள்நாட்டை நோக்கி மழை படிப்படியாகக் குறைந்து வறண்ட நிலையை அடைகின்றது. செக்கோசிலவாக்கியா, கங்கேரி, உருமேனியா முதலிய நாடுகள் கடலிலிருந்து அதிக தூரத்தில் உள்ளன. இந்நாடுகளில் மாரி குளிராகவுள்ளது; கோடையில் மழை பெய்கின்றது.



மழையும் குளிரான இடைவெப்பத் தன்மையும் கொண்ட இக்காலப் பிரதேசத்தின் இயற்கைத் தாவரம் இலையுதிர் காடுகள் ஆகும். இக்காடுகளில் பீச், பேச், ஓக் முதலிய மரங்கள் உள்ளன. இவற்றின் இலைகள் இலையுதிர் காலத்தில் உதிர்ந்துவிடும். இவற்றைப் பத்தனைகளையொத்த காடுகள் என்பர்.

## 4. இடைவெப்பப் புல்நிலக் காலநிலை

இது, குளிரான இடைவெப்பக் காலநிலைப் பிரதேசத்திலிருந்து உள்நாட்டை நோக்கிச் செல்லும்போது ஏற்படுகின்றது. இரசியாவின் தென்பகுதியிற் காணப்படும் இப் புல்நிலம் ஆசியாவின் தெப்புவெளிப் பிரதேசத்தின் ஒரு பகுதியாகும், உள்நாடாக இருப்பதனால் சமுத்திரச் செல்வாக்கு இங்கு மிகவும் குறைவு. இதனால் கோடையில் வெப்பமும் மாரியிற் குளிரும் அதிகமாகவுள்ளது. மழை கோடையிற் பெய்கின்றது. குறுகிய புற்கள் இப்பிரதேசத்தின் இயற்கைத் தாவரமாகும்.

## 5. குளிரான காலநிலை

இரசியாவின் வடபகுதியிற் காணப்படும் இக் காலநிலை குறுகிய கோடையையும் நீண்ட மாரியையுமுடையது. மாரியிற் குளிர் கடுமையாக இருக்கும். வெப்பநிலை உறைநிலையிலும் குறைந்துவிடுவதனால் மழை பெய்யும்போது நீர் உறைந்துவிடுகின்றது. இதனால் மாரியில் மழைப்பனியும் பனிக்கட்டியும் மிகவும் பொதுவானவை.

ஊசியிலைக் காடுகள் இங்குள்ள இயற்கைத் தாவரமாகும். பனிக்கட்டிகள் மரங்களுக்குத் தீங்கு எற்படுத்தாது வழுக்கிவிழும்பொருட்டு இலைகள் ஊசிபோன்று அமைந்துள்ளன. மரங்களின் பொதுவான அமைப்பையும் ஒரு வேலுக்கு ஒப்பிடலாம்.

## 6. தண்டராப் பிரதேசம்

குளிரான காலநிலைப் பிரதேசத்துக்கு வடக்கில் தண்டராப் பிரதேசம் உள்ளது. இது முனைவையண்டியிருப்பதனாற் கடுங்குளிரையுடையது. வருடத்தில் ஒன்பது மாதங்களுக்கு நிலம் பனிப்படலத்தால் மூடப்பட்டுக் கிடக்கும். இங்கு பாசியும் 'இலைக்கன்' எனப்படும் தாவரமும் வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கியலுக்கோர் அறிமுகம் (24)

—: வை. சி. சிவஞானம் :—

மக்கள் தமது பணத்தின் பாதுகாப்புக்காகவும் வேறு வியாபார தன்மைகளுக்காகவும் தமது பணத்தை வங்கியிலிட்டுக் கணக்கு ஆரம்பிக்கிறார்கள். மக்கள் வங்கிகளில் பின்வரும் கணக்குகளைத் தமது தேவைகளுக்கேற்ப ஆரம்பிக்கலாம். அவையாவன:

1. நிலையான வைப்புக் கணக்கு
2. சேமிப்புக் கணக்கு
3. நடைமுறைக் கணக்கு
4. கடன் கணக்கு
5. பிணைப்பணக் கணக்கு

## 1. நிலையான வைப்புக் கணக்கு.

ஒருவர் தாம் விரும்பிய தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வங்கியில் வைப்புப் பணமாக வைத்திருக்கிறோம் என்ற நிபந்தனையுடன் இக் கணக்கை ஆரம்பிப்பர். இவ்விதம் வங்கி பெறும் பணத்திற்கு ஒரு நிலையான பற்றுச்சீட்டு வழங்கும். நிலையான வைப்புப் பணத்துக்கு வங்கி வட்டி கொடுக்கும். இவ் வட்டிவீதம் பணம் வங்கியில் இருக்கும் காலத்துக்கேற்ப உயர்ச்சியடையும். உதாரணமாக 3 மாதம் $2\frac{1}{2}$% வட்டி, 6 மாதம் 3% வட்டி, 9 மாதம் $3\frac{1}{2}$% வட்டி, ஒரு வருடம் 4% வட்டி எனப் பணமிருக்குங் காலத்துக்கேற்ப வட்டி உயர்ந்து செல்லும். நிலையான வைப்புக் கணக்கில் உள்ள பணத்தை எடுக்கவேண்டுமானால் வங்கிக்கு முன்னறிவித்தல் கொடுத்து நிலையான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். நிலையான வைப்புக் கணக்குக்கு வங்கி தரும் வட்டியை நாம் மூன்று வகையாகப் பயன்படுத்தலாம். அவையாவன,

1. வட்டிப் பணத்தைக் குறிப்பிட்ட காலமுடிவில் பணமாகப் பெறலாம்.
2. நிலையான வைப்புக் கணக்குடன் சேர்த்துக்கொள்ளலாம்.
3. நடைமுறைக் கணக்குக்கு மாற்றலாம்.

உ - ம்: இராமன் 5000 ரூபாயை 1-1-69-ம் திகதி மக்கள் வங்கியிலிட்டான். வங்கி வருடம் 4% வட்டி கொடுக்கிறது. அவன் வட்டிப் பணத்தையும் தமது வைப்புக் கணக்குடன் சேர்க்கும் வண்ணம் அறிவித்திருந்தான்.



இராமன் பேரேடு **வங்கி நிலையான வைப்புக் க/கு**

| மா | தி | விபரம் | ரூபா | ச. | மா | தி | விபரம் | ரூபா | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1969 | | | | | | | | | |
| தை | 1 | காசு | 5000 | 00 | | | கீ.கொ.செ. | 5200 | 00 |
| மார் | 31 | வட்டி | 200 | 00 | | | | | |
| | | | 5200 | 00 | | | | 5200 | 00 |
| 1970 | | | | | | | | | |
| தை | 1 | கீ.இ.து. | 5200 | 00 | | | | 5200 | 00 |

வங்கி ஏடு **இராமன் க/கு**

| மா | தி | விபரம் | ரூபா | ச. | மா | தி | விபரம் | ரூபா | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1969 | | | | | | | | | |
| மார் | 31 | கீ.கொ.செ. | 5200 | 00 | தை | 1 | காசு | 5000 | 00 |
| | | | | | மார் | 31 | வட்டி | 200 | 00 |
| | | | 5200 | 00 | | | | 5200 | 00 |
| | | | | | 1970 | | | | |
| | | | | | தை | | கீ. இ. து. | 5200 | 00 |

என் இராமன் பேரேட்டிலும் வங்கியேட்டிலும் பதியப்பட்டிருக்கும்.

## 2. சேமிப்புக் கணக்கு.

இக் கணக்கும் நிலையான வைப்புக் கணக்குப் போன்றதே. இக் கணக்கில் நாம் விரும்பிய நேரத்தில் வசதியுள்ள தொகைப் பணத்தை வங்கியிற் கட்டலாம். பணந் தேவைப்படும்போது வங்கிக்கு அறிவித்தல் கொடுத்து எடுக்கலாம். சேமிப்புப் பணத்துக்கும் வங்கி குறித்தவீத வட்டி கொடுக்கும். இக் கணக்கை ஆரம்பிப்பவர்களுக்கு வங்கி ஒரு பற்று வரவுப் புத்தகம் கொடுக்கும்.

## 3, நடைமுறைக் கணக்கு,

இக் கணக்கை வங்கியில் ஆரம்பித்தவர்கள் எவ்வளவு தொகையையும் இக் கணக்கிலிடலாம். தாம் வங்கியிலிட்ட தொகைக்குள் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் காசோலை மூலம் தான் அல்லது காசோலைக்குரியவர் மூலம் பெற்றுக்கொள்ளலாம். வங்கியின் அனுமதி பெற்று தாம் கட்டிய தொகையிலும் பார்க்கக் கூடுதலான தொகைக்கும் காசோலைகள் வழங்கிப் பணத்தை மீட்கலாம். நடைமுறைக் கணக்கில் இருக்கும் பணத்திலும் பார்க்கக் கூடுதலாக எடுக்கும் பணத்தை வங்கி மேலதிகப் பற்று என அழைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் ஒரு வங்கியில் ஒன்றுக்கு மேற்பட்ட நடைமுறைக் கணக்குகளையும் வைத்திருக்கலாம். ஒருவர் ஒரு வியாபார நிலையத்தை நடத்துபவராகவும் ஒரு கோயிலின் தருமகர்த்தாவாகவும் கடமையாற்றினால் வங்கியில் மூன்று நடைமுறைக் கணக்குகளை வைத்திருக்கலாம், தமது சொந்தத் தேவைக்காக ஒரு கணக்கு ஏற்படுத்தலாம். இக் கணக்கில் தமது சொந்த வருமானங்களைச் செலுத்தித் தமது சொந்தச் செலவுகளுக்காகக் காசோலைகளை வழங்குவர். இக் கணக்கை நடைமுறைக் கணக்கு இலக்கம் 1 எனக் கூறலாம்.

வியாபார நிலையத்துக்காக வைத்திருக்கும் கணக்கை நடைமுறைக் கணக்கு இலக்கம் 2 எனக் கூறலாம். இக் கணக்கில் வியாபார நிலையத்தின் வருமானங்களைச் செலுத்துவர். வியாபார நிலையத்தின் கொடுப்பனவுகளைக் காசோலை மூலம் கொடுப்பர்.

கோயிலுக்காக வைத்திருக்கும் கணக்கை நடைமுறைக் கணக்கு இலக்கம் 3 எனக் கூறலாம். இக் கணக்கில் கோயிலின் வருமானங்களைச் செலுத்திக் கோயிலுக்காகக் கொடுக்கவேண்டிய கொடுப்பனவுகளைக் காசோலை மூலமாகக் கொடுப்பர். ஒவ்வொரு கணக்குக்கும் வேறுவேறான இலக்கங்களிடப்பட்ட காசோலைப் புத்தகம் வங்கியால் வழங்கப்படும். ஒவ்வொரு கணக்குக்குமுரிய காசோலைப் புத்தகங்களிலேயுள்ள காசோலைகள் மூலமாகவே அவற்றின் கொடுப்பனவுகளைக் கொடுத்தல் முறையாகும். — தொடரும்

★★

## கடவுள் எங்கே?

கடந்து நிற்பது கடவுள். கட என்ற பகுதியடியாகப் பிறந்த சொல் இது. கடவுதல், செலுத்துதல்; உடம்பை உயிர் செலுத்துகின்றது. உயிரைக் கடவுள் செலுத்துகின்றார். காரைக் காரோட்டி செலுத்துகிறான். உடம்புக்குள்ளே உயிர்; உயிருக்குள்ளே கடவுள். ரயருக்குள்ளே ரியூப்; ரியூப்புக்குள்ளே காற்று. ரயர் போல உடம்பும், ரியூப்புப்போல உயிரும் காற்றுப்போலக் கடவுளும் என்பதை உணருங்கள். — திருமுருக கிருபானந்தவாரியார்

★★



தொடர்ச்சி :

# மக்கள் இலக்கியம்

பேராசிரியர் வ. பெருமாள், எம்.ஏ., பி.டி., எம்.ஆர்.ஏ.எஸ்.
கோலார் தங்கவயல் (மைசூர் மாநிலம்)

மகளிர் பாடிக்கொண்டு பந்தாடுவதைப்போலவே அம்மானை ஆடும்போதும் ஊஞ்சலில் அமர்ந்துகொண்டு ஆடும்போதும் பாடல் பாடுவது மரபு. அம்மானை ஆடும்போது பாடுகின்ற பாட்டு ''அம்மானை வரி'' எனப்படும். ஊஞ்சல் ஆடும்போது பாடுகின்ற பாடல் ''ஊசல் வரி'' எனப்படும். (ஊசல் - ஊஞ்சல்) இளங்கோ வடிகள், மாணிக்கவாசகர், பெரியாழ்வார்போன்ற பெரும்புலவர்கள் இயற்றிய நூல்களில் நாட்டுப்புற விளையாட்டுப் பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. சிறுபெண்கள் வட்டமாகக் கூடிக் கைகொட்டிப் பாடிக்கொண்டே ஆடுகின்ற ஆட்டம் ''கும்மி'' அல்லது ''கும்மிப் பாட்டு'' எனப்படும். கைகளுக்கு மாறாகக் கோல்களைப் பயன்படுத்தி ஆடிப் பாடும்போது 'கோலாட்டப் பாட்டு' என்றும் பெயர் பெறுகின்றது. கும்மிப் பாட்டுக் கோலாட்டப் பாட்டைவிடத் தொன்மையானது. கும்மிப் பாட்டைப்போன்ற மற்றொரு ஆட்டம் பாடல் ''ஒயிற் கும்மி''யாகும். 'வள்ளி வள்ளி வனந்தனிலே' என்பது புகழ்வாய்ந்த ஒயில்கும்மி. ஓடம் விடும்போது துடுப்பின் அசைவிற்கும் தண்ணீரின் ஓசைக்கும் ஏற்பப் பாடப்படுகின்ற பாட்டு ''ஓடப் பாட்டு'' எனப்படும். இது ''ஏலப் பாட்டு'' ''ஏலேலப் பாட்டு'' ''கப்பற் பாட்டு'' முதலிய பெயர்களாலும் குறிக்கப்படுவதுண்டு. ஏலேலசிங்கன் திருவள்ளுவர் மாணவன் என்றும், அவன் சிறந்த கடல் வணிகன் என்றும் செவி வழிச் செய்தியாக ஒரு கதை வழங்கிவருகின்றது. ஏலேலசிங்கன் பொருள் ஏழு கடலிற் போனாலும் திரும்பும் என்பது பழமொழி. ஏலேலசிங்கன் பெயருடன் தொடர்பு படுத்திப் பாடுகின்ற ஓடப்பாட்டு ஏலப்பாட்டு என்றும் ஏலேலப்பாட்டு என்றும் பெயர்பெற்றது. இவ் வகைப் பாட்டில் 'ஏலேல ஐலசா' என்னும் தொடர் பன்முறை பயின்றுவரும். கடலில் மரக் கலம் (கப்பல்) செலுத்தும்போது இப் பாடல் பாடப்படுவதால் இதற்குக் கப்பற்பாட்டு என்னும் பெயரும் தோன்றிற்று. இதை மலையாளத்தில் ''வஞ்சிப்பாட்டு'' என்று குறிப்பிடுவர்.

மண்ணை நம்பி மரமிருக்கு
ஏலேலோ ஐலசா
மரத்தை நம்பி கிளையிருக்கு
ஏலேலோ ஐலசா
கிளையை நம்பி இலையிருக்கு
ஏலேலோ ஐலசா
இலையை நம்பி பூவிருக்கு
ஏலேலோ ஐலசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவை நம்பி காயிருக்கு
ஏலேலோ ஐலசா
காயை நம்பி கனியிருக்கு
ஏலேலோ ஐலசா
கனியை நம்பி நீயிருக்கே
ஏலேலோ ஐலசா
உன்னை நம்பி நான் இருக்கிறேன்
ஏலேலோ ஐலசா

என்னும் பாடல் பொதுமக்கள் நன்கறிந்த ஓடப்பாட்டாகும்.

பாமர மக்களுக்கும் மெய்யறிவைக் கொளுத்தவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் சித்தர்கள் பாடிய 'பாக்கள் மிகுதியாக உண்டு. அவை ஏட்டுடன் 'இருந்து விடாமல் மக்கள் விரும்பிப் பாடுகின்ற நாடோடிப் பாடல்களாகவே ஆகிவிட்டன.

நாதர்முடி மேலிருக்கும் நாகபாம்பே
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே
பர்தலத்தில் குடிபுகும் பைகொள் பாம்பே
பாடிப்பாடி நின்றுவிளையாடு பாம்பே

என்னும் பாம்பாட்டிச் சித்தர் பாடலும்

மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி? — குதம்பாய்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி?

என்னும் குதம்பைச் சித்தர் பாடலும் பாமர மக்களிடம் நன்கு பயிலப்படுகின்ற சித்தர் பாடல்களாகும்.

ஏற்றத்திலிருந்து வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சும்போது பாடப்படுகின்ற பாட்டு ஏற்றப்பாட்டு எனப்படும். 'ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை' என்பது பழமொழி. தண்ணீர் இறைத்துச் சாய்த்த சாலின் எண்ணிக்கை அதில் பொருந்துமாறு அமைந்த பாட்டு ஏற்றப்பாட்டு. 'முப்பதுடன் எடுத்து மூங்கில் இலைமேலே, மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே, தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் பழைய ஏற்றப்பாட்டு இவண் நோக்கத்தக்கது. அரிச்சந்திரன் ஏற்றப்பாட்டு, இராமாயண ஏற்றப்பாட்டு, விராட பருவ ஏற்றப்பாட்டு முதலியவை ஏற்றப்பாட்டு வகையைச் சேர்ந்தவை. என்னைப் பணிந்தோரை நான் பணியலாச்சே, மறையவருக் கடிமை மகனே விலைப்பட்டோம் என்பது அரிச்சந்திரன் ஏற்றப்பாட்டின் நடை. எளிய பாடல்வாயிலாக உயர்ந்த கருத்துக்களை எல்லோர்க்கும் புகட்ட விரும்பிய சித்தர்கள் உழவனின் வாழ்க்கையோடியைந்த



ஏற்றப்பாட்டின் இனிய சந்தத்தைத் தம் பாடலுக்குப் பயன்படுத்தினர். இவ்வகையில் இராமயோகி தந்த இராஜயோகி ஞான ஏற்றம் என்னும் ஏற்றப்பாட்டு குறிப்பிடத்தக்கது.

உழவர்கள் இறை கூடையைப் பயன்படுத்தி நீர் இறைக்கும்போது பாடுகின்ற இறைவைப் பாட்டு, பொன்னேர் (நல்லேர்) பூட்டி உழுபவர் பாடுகின்ற ஏர்மங்கலம், நெற்களத்தில் சூடடிக்கும்போது பாடுகின்ற முகவைப் பாட்டு அல்லது பொலிப் பாட்டு, உழத்தியர் பாடுகின்ற உழத்திப் பாட்டு (பள்ளுப் பாட்டு), நடவு நடும்போது பாடுகின்ற நடவுப் பாட்டு, கதிரை அறுவடை செய்யும்போது பாடுகின்ற அறுவடைப் பாட்டு முதலிய யாவும் மருத நிலத்தில் தோன்றிய உழவுப் பாடல்களாகும். சிலப்பதிகாரத்திலுள்ள ஏர்மங்கலம், முகவைப் பாட்டு ஆகிய பாக்களைப் பற்றிய குறிப்புக்களும் அவற்றிற்கு அடியார்க்கு நல்லார் வரைந்த உரையும் உழவுத் தொழிலைப் புகழ்ந்து பாடும் பழைய மரபை மெய்ப்பிக்கின்றன.

ஏரொடு நின்றோர் ஏர்மங் கலமும்
அரிந்துகால் குவித்தோர் அரிகடா வுறுத்த
பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்

(சிலப்பதிகாரம், 10:135-137)

தினைப்புனத்திலுள்ள கதிர்களை உண்ணக் கிளி, குருவி முதலிய பறவைகள் தினைப்புனத்திற்கு ஆர்வத்துடன் பறந்து வரும். எல்லா உயிர்கள்மாட்டும் அருள் கொண்ட பண்டைத் தமிழ் மக்கள் அவற்றைக் கல்லெறிந்து கொடுமைப்படுத்தி விரட்டினர் அல்லர். தினைப்புனம் காக்கும் மகளிர் பாட்டுப் பாடிக்கொண்டும் கிளிகடி ஒப்பும் கருவியால் ஒலி எழுப்பியும் ஒலியால் விரட்டினர். தினைப்புனத்திலுள்ள பரண்மீது இருந்து பறவைகளை ஓட்டப் பாடப்படும் ஆயோ என்னும் பாடல் ஆலோலம் எனப்படும். ஆலோலப் பாட்டுப் பாடித் தினைப்புனத்திலுள்ள கிளியை ஓட்டிய செய்தியைக் கபிலர் தாம் யாத்த குறிஞ்சிப் பாட்டில் குறிப்பிடுகின்றார்.

புள்ளார் இயத்த விலங்குமலைச் சிலம்பின்
வள்ளுயிர்த் தெள்விளி இடையிடைப் பயிற்றிக்
கிள்ளை ஒப்பியும்

(குறிஞ்சிப் பாட்டு 99-101)

கரகத்தைத் தலையில் வைத்துக்கொண்டு ஆடும்போது பாடுகின்ற பாட்டு கரகப்பாட்டு எனப்படும். முத்துமாரிக்கு 'ஆடிவரும் பொன்கரகம் எடுப்பது மரபு. மெய்யன்பர்கள் காவடி எடுத்துக்கொண்டு திருத்தலங்களுக்கும் கோயில்களுக்கும் செல்லும்போது பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டே செல்வது மரபு. அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடிப் பாட்டு அல்லது காவடிச் சிந்து எனப்படும்' 'வேல் வேல்' என்று முழக்கிக்கொண்டு முருகனுக்குக் காவடி சுமந்து செல்வதை நாம் இன்றும் காணலாம். இரவு நேரங்களில் பொழுது போக்குக்காகப் பாடப்படுகின்ற பாடல்களில் முதன்மையானது வில்லுப்பாட்டு. முத்தாரம்மன், இசக்கி, நீலி, சங்கிலி, முத்துப் பட்டன், சின்னத்தம்பி, பூதத்தார், சாத்தன், சுடலைமாடன் முதலியோர் கதைகள் வில்லுப்பாட்டில் இடம்பெறும். வில்லுப்பாட்டில் ஈடுபட்டிருப்போர்க்கு நேரம் போவதே தெரியாது. அவ்வளவு சுவையான பாட்டு அது. கோயிலில் விளக்கேற்றுபவன் வில்லுப் பாட்டின் இசையில் ஈடுபட்டு மெய்மறந்துவிடுவான்.

'வில்லடிச்சான் கோயிலிலே விளக்குப்
பொருத்த நேரமில்லை' என்பது பழமொழி.

திருமணம் முடிந்தவுடன் மணமக்கள் முன்னிலையில் பாடப் படுகின்ற பாட்டு கலியாணப் பாட்டு எனப்படும். இதனை நளங்கு என்றும் குறிப்பிடுவதுண்டு. மணமகளின் உடன்பிறந்த நங்கையர் மணமகனை வேடிக்கைக்காகப் பரிகாசம் செய்தும் மணமகனின் உடன்பிறந்த மங்கையர் மணமகளைப் பரிகாசம் செய்தும் பாடுவதால் இப்பாட்டிற்குப் பரிகாசப் பாட்டு என்றும் ஏசல் என்றும் பெயர்கள் தோன்றின. ஒருவரை யொருவர் ஏசிப் பாடியபிறகு இறுதியில் இருசாராரும் சேர்ந்து மணமக்களை வாழ்த்துவர். இதோ ஒரு பாடல்

நடவு நட்ட காலம் போச்சு
  நகையும் நட்டும் அதிகம் ஆச்சு
குடலோ டொட்டிய வயிறு கோணியாச்சு
  ... ... ... ... ... ... ... ... ... ...
செடிசுற் றியகாலம் போச்சு
  தெருவெட்டிப் பார்க்காம லாச்சு
படியுழக்குப் பேனும் போச்சு
  பந்திச் செண்டு சூட லாச்சு

கொங்கு நாட்டில் (கோவை மாவட்டம்) திருமண வைபவத்தின் போது பாடப்படுகின்ற நீண்ட வாழ்த்துப் பாடல் கம்பன் பாட்டு எனப்படும்.

— தொடரும்

### "கொக்கரக்கோ-கோ"

"கொக்கரக்கோ-கோ" என்று சேவல் கூவுகிறதே அதற்கு என்ன பொருள்? கொக்கு - மாமரம், அறு - அழித்த, கோ - தலைவன். அதாவது மாமரமாக வந்து சூரவடிவத்தை வென்ற வீர முருகனுக்குச் சேவல் போற்றி கூறுகின்றது.



# உலகம் போற்றும் தமிழ்மறை

ஐ. கலைவேந்தன், கபரகலை, இளமுல்லை.

இன்றைய உலகிலே எம்மதத்தாரும் சம்மதமாய் ஏற்றுக்கொள்ளும் ஓர் ஒப்பற்ற உயரிய நூல் இருக்கின்றதென்று கூறினால் அது "தமிழ் மறை" என்னுந் திருக்குறளைத் தவிர வேறொன்றாக இருக்கவே முடியாது. திருக்குறள் ஓர் உயர்ந்த நூல். அது சாதி சமய வேற்றுமைகளை யெல்லாம் தகர்த்து, எல்லோரையும் ஒன்றுபடுத்தும் ஒப்பற்ற தனிப்பெருந் தமிழ் நூல். அது இன்று நேற்றுத் தோன்றியதல்ல. அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சங்க காலத்தில் தோன்றியது. அது இன்று மட்டுமல்ல என்றும் உயிரோட்டத்தோடு ஒளிவீசும் என்பதில் ஐயமில்லை.

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு நூலாக இருந்தபோதிலும் அதில் பொதிந்து கிடக்கும் உண்மைத் தத்துவப் பொருட்கள் எந் நாட்டினர்க்கும், எக் காலத்தினர்க்கும், எச் சமயத்தினர்க்கும் பொருந்துவதாயிருக்கின்றபடியால் சான்றோர் அந் நூலைப் "பொது மறை" எனப் போற்றினர். திருக்குறள் ஒன்று தோன்றிய பின்புதான் தமிழ் நாட்டையும், தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் உலக மக்களால் நன்கு அறியமுடிந்தது. இது தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழ் நாடுகளுக்கும் பெருமை அளிப்பதாகும்.

இன்று உலகிலே அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்ற நூல்கள் மூன்றுள்ளன. முதல் வரிசையில், முதலிலிருப்பது சுவிசேஷம் (பைபிள்), இரண்டாவதாக இருப்பது திருக்குர்ஆன், மூன்றாவதாக இருப்பது திருக்குறள். முதலிரண்டும் சமய நூல்கள் என்று கருதப்படுமேயானால் உலக இலக்கிய நூல்களிலே அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பெற்றுத் தலைமை வகிக்கின்ற நூல் திருக்குறள் ஒன்றேயாகும். திருக்குறள் ஒரு கடல்; அதில் மறைந்து கிடக்கும் புதைபொருட்கள் விலை உயர்ந்த முத்துக்களாகும். கடலில் முத்துக் குளிப்போர் எவ்வாறு தம் மூச்சு வலிமைக்கேற்ற அளவு செல்வங்களை அள்ளிக்கொள்கின்றார்களோ அதேபோலத் திருக்குறளில் மூழ்கும் மக்களும் தம் வலிமைக்கேற்ற அறிவுச் செல்வங்களை அள்ளிக் கொள்வதுண்டு. திருக்குறள் மிகக் குறைவான அறிவு படைத்த மக்களுக்கு, அவர்கள் பக்கத்தே சார்ந்து நின்று அறிவு என்ற உணவூட்டியும், பேரறிவு படைத்த மக்களுக்கு எட்டி நின்று உணவூட்டியும் வருவது வியப்பிற்குரிய ஒன்றாகும்.

இவ்வாறு வையத்தினரை வாழ்வாங்கு வாழ வழிவகுத்துக் காட்டுவதற்காக வள்ளுவர் அருளியது இந் நூல். இந் நூலின் பெருமையை மதுரைத் 'தமிழ் நாகனார்' என்ற புலவர்:

"எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்
இல்லாத எப் பொருளுமில்லை" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயாரப் புகழ்ந்துள்ளார். குறள் வடிவங்கொண்ட திருமால் புறவுலகை எல்லாம் ஈரடியால் அளந்ததுபோல, வள்ளுவப் பெருந்தகை மக்களின் உள்ளங்களையெல்லாம் தம் குறள் வெண்பாவடியால் அளந்துவிட்டார். இவ்வாறு ஆழ்ந்த பொருட்களையெல்லாம் பாரறிய மிகச் சுருங்கிய சொல்லால் எழுதப்பட்ட நூல் திருக்குறள். குறட்பாக்களின் மேன்மையைப்பற்றிச் சாத்தனர் திருவள்ளுவர் மாலையில்;

''ஆரியமுஞ் செந்தமிழும் ஆராய்ந்து இதனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரிதாம்; ஆரியம்
வேத முடைத்து தமிழ் திருவள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து'' என்று பாடினார்.

இவ்வாறு பெருமை வாய்ந்த திருக்குறளை அக்காலத்திலிருந்த சங்கப் பலகை அரங்கேற்ற மறுத்தது. இறுதியில் நக்கீரர் முதலிய சங்கப் புலவர்கள் வினவிய வினாக்களுக்குச் செந்தமிழ்ப் பாவால் விடையளித்து அவர்களை வென்று தாம் இயற்றிய நூலை அச்சங்கத்தில் எடுத்தோதி அரங்கேற்றினார் வள்ளுவர். அந்நூலுக்கு இனி எதுவுமில்லை எனச் சங்கப்பலகையும் இடம் கொடுத்தது. இதனை அறிந்து அச்சங்கத்தை நிறுவித் தலைமைபூண்ட முடத்திருமாறன் முதலிய நாற்பத்தொன்பதின்மர்களில் ஒருவனாகிய உக்கிரமபெருவழுதி என்னும் பாண்டியமன்னன் சங்கப் புலவர் நாற்பத்தொன்பது பேர்களையும் கூட்டி எவ்லோரும் வள்ளுவரையும், அவர் இயற்றிய குறளையும் புகழ்ந்து தனித்தனியாக ஒவ்வொருவரும் நாற்பத்தொன்பது வெண்பாக்கள் பாடிச் சிறப்பித்துக் கொண்டாடினார்கள். அவ்வெண்பாக்கள் திருவள்ளுவர் மாலை என்று வழங்குவதாயிற்று.

இவ்வாறு தாம் இயற்றிய அரும்பெரும் காவியத்தை அரங்கேற்றிய வள்ளுவரவர்கள் திருமயிலைக்குத் திரும்பிவந்து இல்லறத்திலேயே இருந்து அம் மயிலாப்பூரிலே ஒரு மாசி மாதத்தில் உத்தர நட்சத்திரத்தில் முத்தியடைந்தார். வள்ளுவர் மறைந்து இற்றைக்கு எத்தனையோ நூற்றாண்டுகளைக் கண்டுவிட்டோம். ஆனால், அவரது புகழுடம்பு மறையாமல் ஒளிவீசிக்கொண்டே இருக்கின்றது.

திருக்குறளின் சிறப்பைக்கொண்டு இவரை வெவ்வேறு பெயர்களால் அழைத்தனர். அவை; நாயனார்; தேவர்; முதற்பாவலர்; தெய்வப்புலவர்; நான்முகனார்; மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் முதலியனவாம்.

திருக்குறள் இன்ன நூலின் வழியே தோன்றியதென்று கொள்ள இடமில்லாமையினால் முதல்நூல், வழிநூல், சார்புநூல் என்ற நூல்வகை மூன்றினுள் முதனூலின்பாற் கொள்ளப்படுகிறது. தரும சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், காம சாஸ்திரம், வேதாந்த சாஸ்திரம் முதலியவற்றின் கருத்தைத் தழுவியது என்றவகையில் இதனை வழிநூல் எனக் கொள்ளுதலும் பொருந்தும் என்பர்.

''எல்லா நூல்களினும் நல்லனவற்றை எடுத்து எல்லோருக்கும் பொதுபடக் கூறுதல் இவர்க்கு இயல்பு'' எனவும், ''வியாழ வெள்ளிகள் துணிவு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றார்'' எனவும், பரிமேலழகர் கூறியுள்ளதனால் இது வழிநூல் எனப்பட்டது எனலாம்.



திருக்குறளின் சிறப்பு இத்தன்மையானது என்று எடுத்துரைக்க இயலாமல் ஔவைப்பிராட்டியார்,

''அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்'' என்று வியந்தார்.

இடைக்காடர் குறட்பாவின் குறளளவை நினைத்து,

''கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்'' என்று பாராட்டினார்.

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த திருக்குறள் ஒன்று தோன்றியிராவிடில் தமிழன் தமிழனாகவே வாழ்ந்திருக்க முடியாது. அந்நூல் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருள்களைப்பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது. அறத்தாறு பொருளீட்டி பின் இன்பம் துய்த்து வாழ்தலே வாழ்வின் பயன் என்பதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல விளக்குகின்றது, மற்றும் உலகில் வாழும் உயிரினங்கள் எல்லாம் ஒன்றையொன்று தழுவி கூடி வாழ்தலே சாலச் சிறந்தது என்பதை அந்நூலில் வள்ளுவப் பெருந்தகை எடுத்தியம்பியுள்ளார்.

தமிழன் பெருமையையும், நாகரீகத்தையும், இலட்சியத்தையும், சிறப்பியல்புகளையும். உணரத் திருக்குறட் கருத்துக்களையும், நூலையும், பல்வேறு துறைகளிலும், எல்லா நாடுகளிலும் பரப்புவதற்கு தமிழ்மக்களாகிய நாம் இடைவிடாது முயலுதல் வேண்டும். தமிழ்நாட்டிலே பிறந்து வளர்ந்த வள்ளுவரை தமிழ்நாட்டிற்கே தந்து என்று கூறுது,

''வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று

பாரதியார் போற்றியுள்ளார். 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'! என்ற பழமொழியை நோக்கும்போது, நாலும் இரண்டும் என்றது - நாலடியாரையும், இரண்டடியில் வரும் குறளையும் குறிக்கும்.

நூலின் பகுப்பு:- இந்நூல் பத்துக் குறளுடையது ஒவ்வொரு அதிகாரமாக நூற்றுமுப்பத்துமூன்று அதிகாரமாக ஆயிரத்து முந்நூற்று முப்பது முத்துக் குறள்களால் ஆக்கப்பட்டிருக்கின்றது. இவற்றுள் முதல் முப்பத்தெட்டு அதிகாரங்கள் அறத்துப்பால் எனவும், இடையிலுள்ள எழுபது அதிகாரங்கள் பொருட்பால் எனவும், இறுதியிலுள்ள இருபத்தைந்து அதிகாரங்கள் காமத்துப்பால் எனவும் பகுக்கப்பட்ட மூன்று பால்களை உடையது, அதனால் இந்நூலை முப்பால் என்று கூறுவர். பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து. தமிழ்வேதம், பொதுமறை, திருவள்ளுவர், பொருளுரை, திருவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுவப்பயன், முதுமொழி, தமிழ்மறை என்ற பெயர்களும் இந் நூலுக்கு உண்டு.

உரையாசிரியர்கள்;- திருக்குறளுக்கு பத்துப்பேர் உரை எழுதியுள்ளார்கள், அவர்கள்;- தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி பரிமேலழகர், திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் என்போராவர், திருக்குறள் ஆசிரியர்கள் பதின்மரில் பரிமேலழகர் எழுதிய உரையே மிகச் சிறந்ததாகப் போற்றப்படுகின்றது.

திருக்குறளின் காலம்:- கிறிஸ்துவுக்குமுன் முப்பத்தோராவது ஆண்டில் திருவள்ளுவர் பிறந்தார் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. அதன்படி இன்று இரண்டாயிரம் ஆண்டுகளாகின்றன. அதே காலத்தில் இந்நூல் இயற்றப்பட்டது.

திருவள்ளுவரையும், திருக்குறளையும் பற்றி மணிமேகலையில் கூறியிருத்தலாலும், இறையனுரகப்பொருளினது உரையில் திருக்குறட்பாக்கள் எடுத்தாளப்பட்டிருத்தலாலும், கடைச்சங்கப் புலவர்கள் இந்நூலைப்பற்றிப் புகழ்ந்து கூறிய பாக்கள் திருவள்ளுவமாலை என வழங்குதலாலும், இந்நூல் மணிமேகலை; அதனேடு சமகாலத்திய நூலாகிய சிலப்பதிகாரம், இறையனுரகப்பொருளுரை முதலியவற்றிற்கு முற்பட்டது என நன்கு புலனுகின்றது.

திருக்குறள் அறத்தினை அறிய முயல்வோருக்கு ஒரு பேரற நூல். அரசியலை அறிய விரும்புவோருக்கு ஓர் அரசியல் நூல் ஞானத்தை விரும்புவோருக்கு ஒரு ஞானநூல். கவிச்சுவை விரும், புவோருக்கு ஒரு காவியம். பேரின்பம் விரும்புவோருக்கு ஒரு பேரின்பநூல். வாழ்க்கை நெறி அறிய விரும்புவோருக்கு ஒரு வாழ்க்கை வழிகாட்டி நூல். அந்நூலைப் பயில்வோர் பெரும் புலமையும், ஒட்பமும் பெறுவர் என்பதில் ஐயமில்லை. திருவள்ளுவர் இயற்றிய இந்நூலை கற்றதினுல் அறியாதன எல்லாம் அறிந்தோம் என்பதை ''கொடி ஞாழல் மாணிபூதனுர் திருவள்ளுவர்மாலையில்,

''அறன் அறிந்தோம் ஆன்ற பொருள் அறிந்தோம் இன்பின்
திறன் தெரிந்தோம்; வீடுதெளிந்தோம்! மறன் எறிந்த
வாளார் நெடுமாற! வள்ளுவனுர் தம் வாயால்
கேளாதன எல்லாம் கேட்டு'' என்று பாடினுர்,

திருவள்ளுவர் இயற்றிய இப் புனிதநூலை; இன்பத் தேன் கூட்டை; உலகினுக் கொளிகொடுக்கும் குற்றமற்ற மணிவிளக்கை, தமிழ்நாட்டின் தனிப்பெரும் கலைச்செல்வத்தை, ஆழ்ந்து கற்றுக் கற்றதன் வழிச்செல்வதே தமிழ்மக்களாகிய எமது கடன். இக் காவியப் புதையலைக் கற்போம்; தமிழ்ப் பண்பாட்டைத் தழைக்கச் செய்வோம். வாழ்க வள்ளுவர்! வளர்க குறள்நெறி!

———

# ''காகிதப்பூ''

— மூதூர் N. C. அருள்வரதன் —

இயற்கை அன்னையின் எழில்மிகு அங்கங்களின் ஒன்ருகிய மாலைக் காலம்; மனேரம்மியமான அவ்வேளையைக் கழிக்க கடற்கரையை நாடிச் சென்றுகொண்டிருந்தார்கள் மானில மாந்தர்கள். நீலப் பட்டாடை விரித்து, நீலத் துகிலால் மூடியதுபோலக் காட்சியளித்தாள் கடலன்னை. பறந்து திரியும் பட்டாம்பூச்சிபோல தம்மை மறந்த நிலையில் திரியும் எத்தனையோ விதமான ஜோடிகள்;

பகலெலாம் உழைத்து ஓய்வில்லாது இருந்த தம் உடலையும் உள்ளத்தையும் தேற்றும் நோக்கத்தோடு வந்திருப்பவர்களுக்கு முன்பாக சிற்சில சிற்றுண்டி வகைகளைக் கொண்டுதிரியும் விற்பனையாளர் எத்தனையோ பேர். மனேரம்மியமான வேளையில் இந்நிகழ்ச்சிகள் யாவும் கடலன்னைக்கு புது சோபையை உண்டுபண்ணிக்கொண்டிருந்தன. ஆனுல்... இவையெதிலுமே சிரத்தையெடுக்காமல் தன்னையே மறந்த நிலையில் மனித நடமாட்டம் அதிகமில்லாத இடத்தில் அமர்ந்திருந்தது ஓர் உருவம்.

கொந்தளிக்கும் கடல்; எதிரே குமுறிக்கொண்டு . தன்னில் மிதந்துவரும் படகுகளையும் மரக்கலங்களையும் ஆட்டியசைத்துக் கொண்டிருந்தது. பொங்கியெழும் அலைகள் கரையை நோக்கி வந்து சென்றுகொண்டிருந்தன. இவைகள் எதையுமே அறியாமல் ஏன்? தன்னைச் சூழ்ந்துள்ள சூழ்நிலையையே மறந்த நிலையில் உட்கார்ந்திருந்த அவ்வுருவம் வேறு யாருமல்ல ''கயல்விழி''தான். கயல்விழி எவ்வளவு அழகான பெயர், பெயருக்குத் தகுந்தாற்போல் அவள் விழிகளும் அழகாகவே இருந்தன. ஆனுல் அந்த விழிகளில் அன்றிருந்த அழகு இன்றில்லையே! முற்றும் துறந்த ஞானியின் கோலம்போல் இருந்தது அவளின் தோற்றம். ஆமாம்; அவள் இப்போ முற்றும் துறந்தவளாய், இல்லை; தன்னையே துறக்க விரும்பியவள்ாய் இருந்தாள். களைத்த முகம்; எங்கோ ஏதோ லயித்தபடி ஆகாயத்தை ஊடுருவிய வண்ணம் இருந்த அவளது ஒளியிழந்த கண்களும், நெற்றியிலே பனித்திருந்த குறுவியர்வையும் அவள் ஏதோ ஒன்றைப்பற்றித் தீவிரமாகச் சிந்திக்கின்ருள் என்பதைக் காட்டியது உண்மைதான்! அவள்தன் மனதில் பெரும் போராட்டமொன்றையே நடத்திக்கொண்டிருந்தாள். அப்போராட்டம் அவள் அப்போ செய்துள்ள முடிவு சரியா? அல்லது பிழையா? என்பதைக் கொண்டதாய் இருந்ததில் வியப்பொன்றுமில்லை, அவள் முடிவு அவளின் மனச்சாட்சிக்குச் சரியென்றே பட்டது. இவை அவளின் ஒருநாட் சிந்தனையில் சிக்கிய முடிவல்ல; பலநாள் சிந்தனுசக்தி செயல்பட வந்துள்ள முடிவுதான் அது. சிந்தித்துக்கொண்டிருந்தவளின் சிந்தனை மெல்லமெல்லப் பின்னேக்கிச் சென்று அவளின் கடந்த கால நிகழ்ச்சிகளை அசைபோடத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம்; அது எத்தனை விசித்திரமானது. அதில்தான் எவ்வளவு மாறுதலுண்டாகிவிட்டது. அன்றும், இன்றும் கயல்விழி கயல்விழிதான். ஆனால் அன்று பார்த்த கயல்விழிக்கும் இன்று பார்க்கும் கயல்விழிக்கும், உருவத்திலும் உள்ளத்திலும் சிறு மாற்றம் ஏற்பட்டுத்தான் இருக்கிறது. ஆனால் ஒரேயொரு நிகழ்ச்சியை மட்டும் அவளால், மறக்கவோ மறுக்கவோ முடியாமல் இருந்தது. இவ்வுலகம் எதற்குத் தலைவணங்குகின்றது. பணம், அழகு, இவைகளுக்குத்தானே! எத்தனையோ பேரின் வாழ்க்கையில் இவை விளையாடிவிட்டிருக்கும்போது, இவள் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியுமா? சுமாரான குடும்பத்தில் பிறந்தாலும் அவள் ஏழையாகவே இருந்தாள். ''அழகு'' அதைப்பற்றி அவளிடம் கதையெடுக்கவே விரும்பமாட்டார்கள். பார்க்க அருவருப்பாக இருத்தது அவளின் தோற்றம். அழகு, பணம், கல்வி இவைகளை மதிக்கும் உலகம், இவைகளில் எந்த அம்சமுமே இல்லாத கயல்விழியை மதிக்குமா? மனமுவந்து கதைக்குமா? அப்படி நினைக்கிறதே தவறுதானே? சிறுவயது முதல் பெரியவளாய் வளரும்போதே அவளுடன் ''குரூபி'' என்ற வசவுப் பெயரும் வளரத் தொடங்கிவிட்டது. இதைப்பற்றி அவள் சிறிதும் கவலையடையவில்லை. மாறாக, இன்பமடைந்தாளப்பேதை. ஏன் உண்மையைத்தானே அவளைப் பரிகசிக்கின்றவர்கள் கூறுகிறார்கள். உண்மை என்றும் அழிவதில்லையல்லவா? பார்க்கும் முகமெல்லாம் அவளைக் கேலிசெய்து சுட்டிக் காட்டுவது போலிருக்கும்போது கூனிக் குறுகிப்போய்விடுவாள். இப்படியிருக்கும் நிலையில் அவள் தன்னைப் பூமிக்குப் பாரமாகவே எண்ணினாள். உலகில் எவருமே தனக்கடைக்கலந் தரமாட்டார்கள், தன்னை யாருமே விரும்பமாட்டார்கள் என்று பூரணமாய் நம்பினாள்.

இத் துயர் நிறைந்த நிலையில் அவள் இதயம் ஏற்க மறுத்த ஓர் விடயம் அவள் செவிகளில் எட்டியது. அது என்ன? எண்ணிப் பார்க்கவே கூசியது அவளிதயம். ஆமாம்; யாருமே விரும்பாத ஒளியை ஓர் மனித இதயம் விரும்புகிறதென்றால்! இது நம்பக்கூடிய விடயமா? நம்பலாமா? இறுதியில் நம்பினாள். தனக்கும் வாழ்விருக்கிறதென்றெண்ணி வியந்தாள். அவ்விதயத்துடன் தன்னிதயத்தையும் இணைத்து வாழத் துடித்தது அவள் பெண்ணுள்ளம். ஆனால் அது தவறு எனக் கண்டித்தது அவள் மனச்சாட்சி. தன்னை வாழவைக்கத் துடிக்கும் மற்ற இதயத்திற்கு தன்னால் துன்பமே தவிர இன்பம் ஏற்படாது என்பதைப் பூரணமாக உணர்ந்த கயல்விழி தானாகவே விலக முற்பட்டாள். அவனைக் காணும்போதெல்லாம் வேதனையோடு விலகிப்போனாள். அவனின் நல்வாழ்வில் அக்கறை கொண்டவளாய் இருந்தாளேதவிர, அதைச் சூறையாடும் எண்ணம் அவளுக்கிருக்கவில்லை. தனக்கு வாழ்வளித்தால் அவ்விதயம் காலமெலாம் கண்ணீர் சிந்துமே என்பதைச் சிந்தித்தவுடன் சிந்தை நொந்தாள். எனவேதான் அவன் வாழ்வில் இருந்து விலகிக்கொண்டு; தூரவிருந்து அவன் நல்வாழ்வைக் கண்டுகளிக்க வெண்ணினாள்.



இதுதான் அவள் முடிவு. இம்முடிவே அவள் இதயத்தில் அசைக்க முடியாத நிலையில் வேரூன்றியிருந்தது. சிந்தனையிலிருந்து விடுபட்ட கயல்விழி சமுத்திரக் கரையில் இருப்பதை உணர்ந்தாள். இருள் மெள்ள மெள்ளப் பூமாதேவியைக் கௌவிக்கொண்டிருந்தாள். காலம் கடந்துவிட்டதை உணர்ந்த அவள் தன்னைத்தானே நொந்துகொண்டு மெதுவாக எழுந்தாள். ஒரு சூடான பெருமூச்சு அவளின் இதயத்தின் அடியிலிருந்து விடுபட்டு வந்தது. இரண்டுசொட்டுக் கண்ணீர் நிலமடந்தையைத் தழுவின. பொறுக்க முடியாத மனச்சுமையோடு மெல்ல நடக்கத் தொடங்கினாள். அவளுக்கு வாழ்வோ, வளமோ இனி யாரால் கிடைக்க முடியும். எவராலுமல்ல! ஏனென்றால் அவள் ஏனைய பெண்களைப்போல மணமுள்ள அழகிய மலரல்ல. அழகே இல்லாத மணமற்ற காகிதப்பூ.

★ ★ ★

## சந்தா

1-1-68 தொடக்கம் பல அன்பர்களுக்கு வெற்றிமணி தொடர்ந்து அனுப்பிவருகின்றோம். சில அன்பர்கள் 1-1-68 தொடக்கமே இன்னும் சந்தாப் பணத்தைச் செலுத்தவில்லை. மாதாமாதம் வெற்றிமணியைப் பெற்றுவரும் அன்பர்கள் தயவுசெய்து எப்போது தொடக்கம் வெற்றிமணியைப் பெற்றுவருகிறீர்கள் என்பதையும், இதுவரை சந்தா அனுப்பியிருந்தால் மொத்தமாக அனுப்பிய தொகையையும் எமக்கு அறிவிக்கவும். இங்குள்ள.கணக்குடன் ஒப்பிட்டுப் பார்த்து உரிய தொகைக்குப் பற்றுச்சீட்டு அனுப்பப்படும். சந்தா செலுத்ாதவர்கள் சந்தாத் தொகையைச் செலுத்தி ஆதரிப்பதுடன், உங்களுக்கு அறிமுகமானவர்களையும் சந்தா தாரராகச் சேர்த்து உதவிபுரியும்படி பணிவன்புடன் கேட்கிறேன்.

— ஆசிரியர்

## நீலமலர்

இடமின்மையால் 'நீல மலர்' தொடர் நவீனம் இவ் விதழில் வெளியிடப்பட வில்லை. அடுத்த இதழில் தொடர்ந்து வெளிவரும். — ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பதில்

ஹபீப்பு முகம்மது, மட்டக்களப்பு.
'கொள்கை மறந்ததுவோ' கவிதை ஏற்றதல்ல.

நீள்கரைநம்பி, யோனகபுர.
'எழில்' கவிதை ஏற்றது. பிரசுரிக்கப்படும்.

திக்குவல்லை கமால்
'வீழ்ச்சி' உருவகக் கதை ஏற்றது; பிரசுரிக்கப்படும்.

அ. சத்தியவதி, காரைதீவு.
'மணியோசை கேட்குதடி' கவிதையும், 'ஒற்றுமை - வேற்றுமை' உருவகக் கதையும் பிரசுரிக்கப்படும்.

அ. பரமேஸ்வரி, காரைதீவு.
'எங்கள் ஊர்' கவிதை வெளியிடப்படும்.

கே. எம். பாறூக், பதியதளாவ.
'உள்ளத்தின் அழைப்பு' கவிதையும், 'சாலதோ நீதி' கதையும் ஏற்றவையல்ல.

இ. சுலோசனு, உசன்.
தங்கள் கவிதை திருத்தத்துடன் வெளியிடப்படும்.

புதுவை இரத்தினதுரை.
'உண்மைக் கவிதை' சிலவற்றை நீக்கி வெளியிடப்படும்.

எம். ஐ. எஸ். தாவூத், மட்டக்களப்பு.
'பள்ளிப் பருவம்' 'முன்னேறடி' கவிதைகள் திருத்தத்துடன் வெளியிடப்படும்.

## விந்தைச் செய்திகள்

### அஞ்சலட்டையின் அதிசயப்பயணம்

1959ம் ஆண்டு ஏப்ரல் 28ம் தேதி சென்னையில் போடப்பட்ட ஒரு அஞ்சலட்டை தஞ்சையில் மேற்குத் தெருவிலுள்ள ஒருநபருக்கு இவ்வாண்டு ஏப்ரல் 7ந் தேதி கிடைத்துள்ளது. சென்னைக்கும் தஞ்சைக்கும் 10 ஆண்டுகளா பயணம் செய்வது?

### அதிசயம்!

கிழக்கிந்தியத் தீவுகளில் ஒரு மரம் இருக்கிறது. இது மிக மிக ருசியுள்ள பழங்களைத் தருகிறது. பழத்தின்விலையோ மிகுதி. ஆனல் இம்மரத்திலுள்ள பழத்தைப் பறித்ததுமே மரம் பட்டு விடுகின்றதாம்!

### திருமணச் செலவு ரூபா 16 கோடி

மிகவும் பின்தங்கிய நாடுகளிலொன்று நேபாளம். கல்வி வாசனையே இல்லாதவர்கள் அங்கு அதிகமாயுள்ளனர். அப்படிப்பட்ட நாட்டில் நேபாளமன்னர் தன் மகன் திருமணத்திற்கு மிக மிக ஆடம்பரமாக சுமார் 16 கோடி ரூபாவைச் செலவழித்திருக்கிருர்! இதுவும் ஒருவகைப் பெருமை போலும்!

# கவிதை அரங்கம்



## இணையவும் மறுப்பதேனே?

— சிவம் —

1

அன்புடன் பண்பு சேரும்
அறிவுடன் அருளும் சேரும்
தென்புடன் அமைதி சேரும்
சிறப்புடன் செழிப்புச் சேரும்

2

பண்ணுடன் பரதம் சேரும்
பாவுடன் பொருளும் சேரும்
எண்ணுடன் எழுத்தும் சேரும்
எளிமையும் அழகும் சேரும்

3

நட்புடன் நன்மை சேரும்
நயத்துடன் நலங்கள் சேரும்
நுட்பமும் அறிவும் சேரும்
நுணுக்கமும் திறனும் சேரும்

4

சுத்தமும் சுகமும் சேரும்
துணிவுடன் பணிவு சேரும்
வித்தையை வெற்றி சேரும்
விந்தையும் விருப்பும் சேரும்

5

ஒன்றுடன் ஒன்று சேரும்
ஒற்றுமை யாகி நிற்கும்
நன்றிவை சேர்வதாலே
நலம்பெறு கின்ற தன்றே

6

இப்படி இவைக ளெல்லாம்
இணைவதைப் பார்த்தும் மாந்
இப்புவி மீதில் ஒன்ருய் [தர்
இணையவும் மறுப்ப தேனே?

## தமிழர் ஏனே தூங்குகிருர்?

செல்வி அ. திவ்யபூரணம்

காலம் விரைவாய்க் கடக்கின்றது
கடமைகள் யாவும் பெருகிறது
ஞாலத்தில் வாழும் தமிழரெலாம்
நாளும் ஏனே தூங்குகிருர்
பண்புத் தமிழர் நிலையென்ன
பதுங்கும் தமிழர் நினைவென்ன?
தண்ணுர் தமிழின் நிலையறிந்தும்
தமிழர் ஏனே தூங்குகின்ருர்
தமிழர் பெருமை தெரியாது
தமிழே பேசத் தெரியாது
தமிழன் என்று சொல்லிவிட்டால்
தமிழ்தா னிங்கு நிலைத்திடுமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீல வானம்

அரங்கராசன் B. Sc., B. T.
அரசு உயர் பள்ளி, பெரம்பலூர், திருச்சி, S. I.

கொள்ளை கொள்ளை இன்பமடா
கொடுக்கும் நீல வானமடா
வெள்ளைப் பஞ்சு மேகமடா
விளைக்கும் கோலம் கோடியடா.
காட்டும் கதிரின் காட்சியடா
கனிந்த செவ்வான் சோலையடா
சூட்டும் கருப்புச் சேலையிலே
சுடரும் அணிகள் மின்னலடா.
கிள்ளைப் பேச்சுப் பாப்பாவும்
கொஞ்சும் நிலவு ஓடமடா
கொள்ளை அழகுப் பூக்களடா
கொடுக்கும் விண்மீன் தோட்டமடா.
நாட்டில் செழுமை ஓங்கிடவே
நன்றே வானும் பெய்யுதடா
ஏட்டில் எழுத முடியாத
இயற்கை அன்னை ஆடலடா.

## உழைக்க வேண்டும்

'கட்டைபறிச்சான் க. கனகசிங்கம்'

சாதி தொலைய வேண்டும் — சமயச்
சண்டை ஓய வேண்டும்
நீதி ஓங்க வேண்டும் — உலகில்
நேர்மை தழைக்க வேண்டும்.
பஞ்சம் பறக்க வேண்டும் — நல்ல
பண்பு மிளிர வேண்டும்
அஞ்சி வாழ்ந் திடாது — வாழ்வின்
அல்லல் போக்க வேண்டும்.
பலியைத் தடுக்க வேண்டும் — தமிழில்
பற்று வைக்க வேண்டும்
நலிந்து வாழும் ஏழை — திருந்த
நன்கு உழைக்க வேண்டும்.
நெல்லை விதைக்க வேண்டும் — உலகில்
நேர்மை நிலைக்க வேண்டும்
சொல்லில் உண்மை கொண்டு — என்றும்
சோரா துழைக்க வேண்டும்.



## தமிழ் ஒளி

மாரிதாசன் - கல்முனை.

நல்ல தமிழ் வளரவேண்டும் நாட்டிலே
என்னுளு மதைப் போற்றவேண்டும் உலகிலே
கன்னித் தமிழ் கலைவளரக் கவிதைமிகு பாடியே
தெள்ளு தமிழ் செந்தமிழைச் சீராய்நாம் போற்றியே

முக்கனியாம் முத்தமிழை மூவேந்தர் போற்றிடும்
அக்கனி யானபெரு அமிழ்தினு மினிய தமிழையே
குமரிமுதல் இமயம்வரை கொண்டுமேவு தமிழினம்
குலமருவக் கொண்டுவளர் குதூகலமாய்ப் பாடியே

பண்டைத் தமிழ் பாவலர்தம் பாட்டுமிக ஏட்டிலே
தொண்டு தொட்டு வந்ததமிழ் தோன்றுமிக நாட்டிலே
பழமையுறு முதுமைபெறு பழந்தமிழ் கிளிமொழி
பழகவரும் அருமைமிக இனிமைகாணத் தமிழ் ஒளி.

**

## இன்பத் தமிழ்!

— வே. குமாரசாமி —

இன்பத்தமிழ்ப் பாட்டாம்
இனியசுவைப் பாட்டாம்
அன்புத்தமிழ்ப் பாட்டாம்
அழகுதமிழ்ப் பாட்டாம்

தொன்மைத்தமிழ்ப் பாட்டாம்
தூயசங்கப் பாட்டாம்
மென்மைத்தமிழ்ப் பாட்டாம்
மேலாம்பக்திப் பாட்டாம்

அன்னைத்தமிழ்ப் பாட்டாம்
அறிவுத்தமிழ்ப் பாட்டாம்
கன்னித்தமிழ்ப் பாட்டாம்
காதலின்பப் பாட்டாம்

சின்னத்தமிழ்ப் பாட்டாம்
செழிப்புத்தமிழ் பாட்டாம்
பென்னம்பெரிய பாட்டாம்
பிள்ளைத்தமிழ்ப் பாட்டாம்

கன்னல்தமிழ்ப் பாட்டாம்
கனிந்தஇசைப் பாட்டாம்
முன்னும்பின்னும் பாட்டாம்
முத்தமிழ்த்தேன் பாட்டாம்

அன்னைமொழிப் பாட்டாம்
அது தமிழ்த்தா லாட்டாம்
என்னைப்பெற்ற அன்னை
இசைக்குமின்பப் பாட்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வங்கள்!

பசறையூர் - க. கிருஷ்ணு

அன்னையென்னுந் தெய்வந்தன்னை
அனுதினமும் வணங்கிடு
அமுதமூட்டி அணைத்துக்கொஞ்சும்
அன்பிற்குள்ளம் இணங்கிடு
கண்மணிக்குள் ஒளியாமவளின்
கால்இரண்டும் தொழுதிடு
கனிச்சுவையாம் அறிவுரைக்குக்
கட்டுப்பட்டு வாழ்ந்திடு.

தந்தையென்னும் தயாபரனின்
தாளையென்றும் வணங்கிடு
தாரகமாம் அவரின்சொல்லை
வேதம்என்றே நம்பிடு
சிந்தைதன்னில் அவர்உருவை
தீட்டிவைத்துப் போற்றிடு
செய்கைதன்னில் அவர்புகழை
தெளிவுபெறச் செய்திடு.

அறிவுக்கண்ணை திறந்துவைக்கும்
ஆசானுக்குப் பணிந்திடு
அறிஞனக உன்னைமாற்றும்
அவரைக்கூப்பித் தொழுதிடு
விரிவுரைகள் பலவுஞ்சொல்வார்
விநயமாகக் கேட்டிடு
விந்தையான உலகந்தனில்
தூயவாழ்வைப் பெற்றிடு.

OoO

சென்ற இதழ்த் தொடர்ச்சி;

## 1-10-69தொடக்கம் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் புதிய சம்பள விகிதம்

### உதவி ஆசிரியர்கள்

### பயிற்றப்பட்ட சிறப்புப் பட்டதாரிகள்

Graduates Trained Honours

பழைய ச. வி. 3900–4 | 120–8 | 180-1 | 240–6060 வருடம்
புதிய ச. வி 6600–5 | 444–8 | 180– | 8760 ,,

| மாத. ப. ச. வி. | பு. ச. வி. | ப. ச. வி. | பு. ச. வி. |
|---|---|---|---|
| 325 | 550 | 410 | 640 |
| 335 | 562 | 425 | 655 |
| 345 | 574 | 440 | 670 |
| 355 | 586 | 455 | 685 |
| 365 | 598 | 470 | 700 |
| 380 | 610 | 485 | 715 |
| 395 | 625 | 505 | 750 |

### பயிற்றப்பட்ட பட்டதாரிகள் Graduates Trained

பழைய ச. வி. 3420–4 | 120–8 | 180-1 | 240–5580 வருடம்
புதிய ச. வி. 6024–4 | 144–8 | 180—1 | 240—8280 ,,

| மாத. ப. ச. வி. | பு. ச. வி. | ப. ச. வி. | பு. ச. வி. |
|---|---|---|---|
| 285 | 502 | 370 | 595 |
| 295 | 514 | 385 | 610 |
| 305 | 526 | 400 | 625 |
| 315 | 538 | 415 | 640 |
| 325 | 550 | 430 | 655 |
| 340 | 565 | 445 | 670 |
| 355 | 580 | 465 | 690 |

### சிறப்புப் பட்டதாரிகள் Honours Graduates

பழைய ச. வி. 3180–10 | 120–7 | 180—5640 வருடம்
புதிய ச. வி. 5736–11 | 144–6 | 180—8400 ,,

| மாத. ப. ச. வி. | பு. ச. வி. | ப. ச. வி. | பு. ச. வி. |
|---|---|---|---|
| 265 | 478 | 355 | 586 |
| 275 | 490 | 365 | 598 |
| 285 | 502 | 380 | 610 |
| 295 | 514 | 395 | 625 |
| 305 | 526 | 410 | 640 |
| 315 | 538 | 425 | 655 |
| 325 | 550 | 440 | 670 |
| 335 | 562 | 455 | 685 |
| 345 | 574 | 470 | 700 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டதாரிகள்: Ordinary Graduates

பழைய ச. வி. 2700–10 | 120—7 | 180—5160 வருடம்
புதிய ச. வி. 5160–10 | 144–7 | 180—7860 ,,

| மாத. ப. ச. வி. | பு. ச. வி. | ப. ச. வி. | பு. ச. வி. |
|---|---|---|---|
| 225 | 430 | 315 | 538 |
| 235 | 442 | 325 | 550 |
| 245 | 454 | 340 | 565 |
| 255 | 466 | 355 | 580 |
| 265 | 478 | 370 | 595 |
| 275 | 490 | 385 | 610 |
| 285 | 502 | 400 | 625 |
| 295 | 514 | 415 | 640 |
| 305 | 526 | 430 | 655 |

## பயிற்சிபெற்ற ஆசிரியர்கள்: முதலாம் வகுப்பு
First Class Secondary / Vocational Trained
(Trained Special Subjects)

பழைய ச. வி. 2220–14 | 120–4 | 180—4620 வருடம்
புதிய ச. வி. 4584–14 | 144–4 | 180—7320 ,,

| மாத. ப. ச. வி. | பு. ச. வி. | ப. ச. வி. | பு. ச. வி. |
|---|---|---|---|
| 185 | 382 | 285 | 502 |
| 195 | 394 | 295 | 514 |
| 205 | 406 | 305 | 526 |
| 215 | 418 | 315 | 538 |
| 225 | 430 | 325 | 550 |
| 235 | 442 | 340 | 565 |
| 245 | 454 | 355 | 580 |
| 255 | 466 | 370 | 595 |
| 265 | 478 | 385 | 610 |
| 275 | 490 | | |

## இரண்டாம் வகுப்பு Second Class

பழைய சம்பள விகிதம்: 1860–2 | 120—2100 வருடம்
புதிய ,, ,, 4152–2 | 144—4440 ,,

| மாதம் பழைய சம்பள விகிதம் | புதிய சம்பள விகிதம் |
|---|---|
| 155 | 346 |
| 165 | 358 |
| 175 | 370 |

— தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிற் செய்திப் பத்திரிகையாகப் பதியப்பட்டது: QB 3033


★ தமிழ் ★ ஆங்கிலம்

★ சிங்களம்

— ஆகிய மும்மொழிகளிலும் —

* குறித்தநேரத்தில்

* குறைந்த செலவில்

* சிறந்த முறையில்

உங்கள்

**அச்சுவேலைகள்**

செய்து கொடுக்கப்படும்.

# சக்தி அச்சகம்

253 1/1, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.



இப் பத்திரிகை, சக்தி அச்சகத்தினருக்காக, பொன். இராசரத்தினம் அவர்களால் யாழ். ஸ்ரான்லி வீதி, 253 1/1 இலக்கத்திலுள்ள சக்தி அச்சகத்தில், 15-7-70இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org